உ

ஸ்ரீ சித்திவிநாயகர் துணை



ஸ்ரீ அங்காளம்மன் துணை



ஸ்ரீ முருகன் துணை



tnhrce.org

ஒளியாளை புற்றுருவா யுதித்தாளை யழகுமிகுந் தோங்கும் பச்சை
கிளியாளை தீயாமுறை கேளாளை யடியார்க்கு கிருபை நீடும்
அளிப்பாளை பொன் பூங்கொம்பனையாளைப் பம்பை முரசரவம் நீங்கத்
தளியாளை தளர நகர் சக்தி யங்குத் தாய்தாளைச் சார்ந்து வாழ்வோம் - கமலகிரி புலவர்

**தமிழ்நாடு அரசு**

## இந்து சமய அறநிலையத்துறை
## திருப்பூர், முத்தணம்பாளையம்

# அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்
# மகா சிவராத்திரி திருவிழா அழைப்பிதழ்

**இறையன்புடையீர்,**

கங்கையை சடையில் அணிந்த ஈசன், இடப்பாகம் நின்ற மங்கை நல்லாள் அன்னை பரமேஸ்வரி அவள் தன் அருட்குழந்தைகளின் பிறவிப்பிணி நீக்கி பேரன்பில் இகம், பரத்தில் அருள் பொருள் தர வேண்டி எடுத்த அவதாரங்கள் பற்பல. அவற்றில் ஏழைக்கு ஏழையாய், உடல் பிணி நீக்கி என்னில் அடங்காத மந்திர, பூத, பிசாசு, பில்லி சூனியம், ஏவல்களில் இருந்து தன் அடியாரை காக்க சித்தாங்கு வேடமிட்டு பிள்ளை வரங்களும் அளித்து மேல்மலையனூரில் அருளாட்சி செய்தவள் அம்பிகை அன்னை ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி.

பிரம்மன் சிரம் கொய்து பிரம்மஹத்தியில் அகப்பட்டு ஈசன் ஓடு தனை ஏந்தி, பிணியால் அகப்பட்டு, அன்னை அன்னபூரணியால் அன்னமிடப்பட்டு பசிப்பிணி நீங்கிய இடம் காசி. சிவன் மயான பூமி, அந்த பிரம்ம கபாலத்தின் ஆவணம் நீக்கி தன் பாதத்தால் மயானத்தில் சிரசுதனை பூமியில் அழுத்தி அப்பனுக்கு நிவர்த்தி அளித்து சாகா வரமும், வேகா சுடலையும் வரம் பெற்ற வள்ளாலனையும் அழித்து, தேவர்களுக்கும், அடியவர்களுக்கும் புற்றுருவாய் அருளாட்சி செய்யும் அம்பிகையின் மயான பூமி தலம் மேல்மலையனூர்.

சாதி, பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் அனைத்து சாதியினருக்கும் குல தெய்வமாகி பக்தர்களின் நீண்ட தூர பயணத்தை காண சகியாமல் மீண்டும் தானே புற்றுருவாய், சுயம்புவாக தோன்றி காராம் பசு மூலமாக காட்டிகொடுத்து கோயில் கொண்டு ஆட்சிசெய்யும் தலம் தளர நகர் பதி கொங்கு பொன் குலுக்கி நாட்டில், திருப்பூர் மாநகரில் 7வது கல் தொலைவில் முத்தணம்பாளையத்தில் அநேக அற்புதங்கள் செய்து ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து அகண்ட சச்சிதானந்த சொரூபியாய் அருளாட்சி செய்து வரும் அன்னை ஸ்ரீ அங்காளம்மனுக்கு கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நிகழும் ஹேவிளம்பி வருடம், தை மாதம் 30ம் தேதி ( 12.02.2018 ) திங்கட்கிழமை முதல் மாசி மாதம் 08ம் தேதி ( 20.02.2018 ) செவ்வாய்க்கிழமை முடிய மகா சிவராத்திரி திருவிழா நடைபெற இருப்பதால் பக்தர்களும், ஸ்ரீ அங்காளம்மனை குல தெய்வமாக கொண்டவர்களும், எல்லா திருவிழா நாட்களிலும் கலந்து கொண்டு அருள்மிகு அங்காளம்மனின் திருவருள் பெற்று சிறப்புடன் வாழ வேண்டுகிறோம்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கும்,

**வே. ராஜேந்திரன் M.Sc.,**
தக்கார்

**சி. தீபா BCA., M.B.A.,**
செயல் அலுவலர்

## மகா சிவராத்திரி உற்சவ நிகழ்ச்சிகள் – திருக்கோயில் மற்றும் உபயதாரர்கள்

### ஹேவிளம்பி வருடம், தை மாதம் 30ம் தேதி (12.02.2018) – திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| இரவு 7.00 மணிக்கு | : | கொடியேற்றம்<br>திருக்கோயில் நாட்டாமைக்காரர் திரு. S. திருஞானம் அவர்கள் |

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 1ம் தேதி (13.02.2018) – செவ்வாய்க்கிழமை மகா சிவராத்திரி

| | | |
|---|---|---|
| பகல் | : | வெள்ளி கவச அலங்காரம் |
| மாலை 6.00 மணிக்கு | : | திருப்பூர், ஈஸ்வரன் கோயில் திரு. சந்திரசேகர் குழுவினரின் நாதஸ்வரம் |
| மாலை 6.30 மணிக்கு | : | சிறுவர், சிறுமியர் நடன நிகழ்ச்சி நடைபெறும் |
| இரவு 8.00 மணிக்கு | : | மேல்மலையனூர் ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோயிலிருந்து பூசாரிகள் கொண்டு வந்த அக்கினி தீர்த்தத்தால் அபிஷேக பூஜைகள் செய்தல் |
| இரவு 9.00 மணிக்கு | : | கங்கணம் கட்டுதல் |
| இரவு 10.00 மணிக்கு | : | நந்தீஸ்வரனை அழைத்தல் |
| இரவு 11.00 மணிக்கு | : | வெற்றிலை பாக்கு பிடித்தல் |
| இரவு 12.00 மணிக்கு | : | அலங்காரம், மகா சிவராத்திரி, தேவேந்திர பூஜை, தங்க கவச அலங்காரம் |
| இரவு 2.00 மணிக்கு | : | முகம் எடுத்து ஆடுதல் |
| இரவு 3.00 மணிக்கு | : | மயான பூஜை, வல்லான கண்டனை சம்ஹாரம் செய்தல் |

tnhrce.org

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 2ம் தேதி (14.02.2018) – புதன்கிழமை

| | | |
|---|---|---|
| அதிகாலை 5.00 மணிக்கு | : | சக்தி விந்தை அழைப்பு, (அலகு தரிசனம்) அம்மன் தங்க கவச அலங்காரம் |

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 3ம் தேதி (15.02.2018) – வியாழக்கிழமை (அமாவாசை)

(சூரிய கிரகணம் இந்தியாவில் தெரியாது.)

| | | |
|---|---|---|
| காலை 8.00 மணிக்கு | : | அம்மன் ரிஷப வாகனத்தில் பவனி வருதல் |
| இரவு 8.00 மணிக்கு | : | பாகை விளையாடுதல், அம்மன் வரலாற்றை பாட்டுடன் எடுத்துரைத்தல் |

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 4ம் தேதி (16.02.2018) – வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 9.00 மணிக்கு | : | அம்மன் புறப்பாடு |
| மாலை 5.00 மணிக்கு | : | அம்மன் ரிஷப வாகனத்தில் பவனி வருதல், பூவோடு எடுத்தல் |

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 5ம் தேதி (17.02.2018) – சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 7.00 மணிக்கு | : | மாவிளக்கு, அம்மன் பவனி வருதல் |
| மாலை 4.00 மணிக்கு | : | பரிவேட்டை, அம்மன் அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தில் தண்ணீர் பந்தல், ஸ்ரீ விநாயகர் கோயிலுக்கு சென்று வருதல் |

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 6ம் தேதி (18.02.2018) – ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணிக்கு | : | வேடகிரி சிம்ம வாகனத்தில் அம்மன் பவனி வருதல் |
| மாலை 6.00 மணிக்கு | : | மஞ்சள் நீர், அம்மன் புஷ்பக விமானத்தில் பவனி வருதல் |

### ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 8ம் தேதி (20.02.2018) – செவ்வாய்க்கிழமை

| | | |
|---|---|---|
| இரவு 7.00 மணிக்கு | : | மகா கும்ப பூஜை, பேச்சியம்மன் பூஜை |

**திருவிழா காலத்தில் காலை, மாலை அம்மன் திருவீதி உலா நடைபெறும்.**

## அன்னதான நன்கொடை வேண்டுகோள்

### "தானத்தில் சிறந்தது அன்னதானம்"

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் நாள்தோறும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு ஒருமுறை நிரந்தர வைப்புநிதியாக ரூ. 15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) செலுத்தி வருடா வருடம் தாங்கள் விரும்பும் ஒரு நாளில் அன்னதானம் செய்யலாம். நாள் ஒன்றுக்கு ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும் ) செலுத்தி தங்களது பிறந்த நாள் அல்லது தங்களது குழந்தைகளின் பிறந்த நாள் போன்ற முக்கியமான நாட்களில் குறைந்தது 50 பக்தர்களுக்கு ஒரு நாள் அன்னதானம் வழங்கி அருள்மிகு அங்காளம்மன் பேரருளுக்கு பாத்திரராகும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் இத்திட்டத்திற்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டம் 80Gன் கீழ் வருமானவரி விலக்கு பெறப்பட்டு உள்ளது என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## குலதெய்வ பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள்

இத்திருக்கோயிலில் தாங்கள் தரும் நன்கொடைகள், தங்கம், வெள்ளி இனங்கள், புடவைகள் மற்றும் தானிய வகைகளை திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி நன்கொடை, பொருட்களை எந்த ஒரு தனி நபரிடமும் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. காணிக்கைகளை உண்டியலில் செலுத்தவும்.

tnhrce.org

**நமது திருக்கோயில் மகா சிவராத்திரி திருவிழாவிற்கு கீழ்கண்ட பொருட்களுக்கு உபயதாரர்கள் வரவேற்கப்படுகிறார்கள்**

திருவிழா பத்திரிக்கை, வாழை மரங்கள், மேடை அலங்காரம், பந்தல், பூ மாலைகள், அன்னதானம், திருக்கோயில் முழுவதும் வெள்ளை அடித்தல், பூஜை பொருட்கள், வான வேடிக்கை, மஞ்சள் சரடு, ஒலி & ஒளி அமைப்பு, ஜெனரேட்டர், திருக்கோயில் வெளிப்புறத்தில் சுத்தம் செய்ய JCB, பயிறு வகைகள், விளம்பர மஞ்சள் பைகள் மற்றும் வெளிப்புற வாயில் இரும்பு கேட்.

## அபிஷேக திட்டம் ரூபாய் 750/-

இத்திருக்கோயிலில் அபிஷேக திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் நடைபெற்று வருகிறது. அபிகேம் செய்ய விருப்பமுள்ள அன்பர்கள் ரூ. 750/- அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு அபிஷேகம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. வெளியிலிருந்து கொண்டு வரும் அபிஷேகப் பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**அர்ச்சனை மற்றும் கட்டண சீட்டுக்களை பெற்றுக்கொண்டு பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

மகாசிவராத்திரி அன்று இரவு முழுவதும் **அன்னதானம் மற்றும் டீ, காபி இலவசமாக** வழங்கப்படும்.
உபயதாரர்கள் : முத்தணம்பாளையம் நண்பர்கள் மற்றும் இறையன்பர்கள்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கும்,

**திருக்கோயில் பூசாரிகள் மற்றும் பணியாளர்கள்**

**திருக்கோயில் தொலைபேசி எண் : 0421 - 2219730**